இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு  நலவாழ்வு முகாம் 2015–16

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல்  : elephantcamp@tnhrce.org

நாள் 17.01.2016

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் நடைபயிற்சி மேற்கொண்ட  யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் மாலை உணவருந்தி ஓய்வெடுக்கத் துவங்கின. ஆணையர் அவர்களால் திருக்கோயில் யானைகள் உணவு வழங்கல் மருத்துவ சிகிச்சை மற்றும் சூரிய மின்வேலி அமைப்பு பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது கோவை இணை ஆணையர் மற்றும் கோவை வனக்கால்நடை மருத்துவ அலுவலர் உடனிருந்தனர்.











